

"இஞ்சை உவையள் கூலிக்கு மாரடிச்சு, எங்கட நிலத்தையும் சனத்தையும் நாசமாக்கின பாவத்துக்கு இப்ப அங்க போய் வாங்கிக் கட்டுகினம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 166

வெள்ளிக்கிழமை
10 மே 2024

சித்திரை
வள்ளுவ

## மூதாட்டியிடம் கொள்ளை: மூவருக்கு 6 மாதச் சிறை

முல்லைத்தீவு, மே 10
பருத்தித்துறையில் மூதாட்டி ஒருவரின் கைத்தொலை பேசியை கொள்ளையிட்ட மூவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு

☞ 11

## தவறான முடிவெடுத்து யுவதி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 10
தனக்குத்தானே தீ மூட்டி இளம் யுவதியொருவர் உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை

☞ 11



ரஷ்யக் கூலிப்படையில் இணைந்த

# சிறிலங்காப் படையினர் 200 பேர் உக்ரைனில் பலி!

கொழும்பு, மே 10
உக்ரைன் – ரஷ்ய மோதலில், கூலிப்படைகளாக இலங்கை இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் பலர் செயற்பட்டுவருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் சுமார் 200 பேர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் என அங்கிருந்து தப்பி வந்த சிப்பாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

☞ 11

தப்பி வந்த சிப்பாய் 'திடுக்' தகவல்



## ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் ஈழத்தமிழன்

பிரான்ஸில் உயர் கௌரவம்

பரிஸ், மே 10
ஒலிம்பிக் தீபத்தின் நீண்ட அஞ்சலோட்ட சுற்றுப்பயணம் பிரான்ஸ் முழுவதும் இடம்பெறவுள்ள நிலையில் பரிஸ் பிராந்தியத்தில் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் நல்வாய்ப்பு ஈழத் தமிழர் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

☞ 11

புன்னாலைக்கட்டுவனில்

## வீட்டில் இருந்தவர் வெப்பத்தால் சாவு!

யாழ்ப்பாணம், மே 10
அதிக வெப்பம் காரணமாக யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவஞானம் ஜெயக்குமார் (வயது-44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

☞ 11



## நட்டமடையும் நிறுவனங்களை தொடர்ந்து பராமரிக்க முடியாது

நாடாளுமன்றத்தில் ரணில் கைவிரிப்பு

கொழும்பு, மே 10
நட்டமடையும் அரச நிறுவனங்களை தொடர்ந்து நிர்வகிக்க முடியாது. தற்போது நாம் நரகத்தில் ஓய்வுநிலையில் இருக்கின்றோம் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வரலாற்றில் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவதா? அல்லது தியாகிகளாக அடையாளப்படுத்தப்படுவதா? என்பதை மக்கள் பிரதிநிதிகள் தீர்மானித்துக்

☞ 11

ஜனாதிபதித் தேர்தல்

## செப்.17 - ஒக்.16 வேட்புமனு கோரல்

தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 10 ,
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 2024 செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16 ஆம் திக

☞ 11



## இலங்கையில் இன்னும் தொடர்கின்றன வதைகள்

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மே 10
இலங்கையில் உள்நாட்டு போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்த பின்னரும் சிறுபான்மையின மக்கள் பாதுகாப்புப் படையினரால் தொடர் சித்திரவதைக்கு ஆளாகிவருகின்றனர் என்று தென்னா

☞ 11



## டயானாவின் பதவி பறிபோனது நேற்று!

நாடாளுமன்றத்தின் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, மே 10
டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கான தகுதியைக் கொண்டிருக்கவில்லை என உச்சநீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்ததையடுத்து, நாடாளுமன்றத்

☞ 11

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மகாவலி’ மரணப்பொறிக்கு ஒருபோதும் அஞ்சி ஓடோம்!

ரவிகரன் ஆணித்தரம்



**முல்லைத்தீவு, மே 10**

**முல்லைத்தீவில் ‘மகாவலி’ எனும் மரணப்பொறி அமைத்து பூர்விக தமிழ்மக்களை விரட்ட அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மாவட்டச் செயலர்கள், அரச அதிகாரிகள் உடந்தையா? என்ற சந்தேகம் எழுகிறது - என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன் சட்டி, பானைகளுடன் தொடர் போராட்டத்தில் குதிக்க வேண்டிவரும் என்றும் ரவிகரன் எச்சரித்தார்.

இதுதொடர்பில் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு மாவட்டச் செயலக புள்ளிவிவரத்தின்படி 2 ஆயிரத்து 199 ஏக்கர் காணி 625 பயனாளிகளுக்கு என்று மகாவலி திட்டத்தால் அபகரிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு இது 4 ஆயிரம் ஏக்கராக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மகாவலியின் ஆக்கிரமிப்புக்குள் முல்லைத்தீவின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி 6 கிராம அலுவலர் பிரிவுகள் விழுங்கப்பட்டுள்ளன. நெல் உற்பத்தியால் தன்னிறைவு கண்ட மாவட்டத்தில் விவசாயச் செய்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே தமிழர்களுடைய பூர்விக காணி என்பதற்குத் தெளிவான உறுதிகள் மற்றும் இதர ஆவணங்கள் இருக்கின்றன. மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் சொந்தமண்ணிலிருந்து தமிழர்களை விரட்ட நினைக்கும் இனவாத அரசாங்கத்தின் செயற்பாட்டுடன் அரச அதிகாரிகளும் துணைபோகிறார்களா? இதற்கெதிராக விரைவில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் சட்டி, பானைகளுடன் தொடர்போராட்டத்தில் ஈடுபட வேண்டி ஏற்படும்- என்றார். (ச)

## பெருமளவு போதைப்பொருள் கட்டுநாயக்காவில் பறிமுதல்

யாழ்ப்பாணம், மே 10

2 கோடி ரூபா பெறுமதியான 5 கிலோவுக்கும் அதிகமான குஷ், கஞ்சா போதைப் பொருள்களுடன் கட்டுநாயக்கவில் வைத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகமவைச் சேர்ந்த குறித்த இளைஞர் தாய்லாந்திலிருந்து வருகை தந்த போதே அவரிடமிருந்து போதைப்பொருள் மீட்கப்பட்டது. (ச-இ)

## அதிகரிக்கும் வெப்பநிலை; அபாயத்தில் பவளப்பாறை

கொழும்பு, மே 10

வெப்பநிலை இன்னும் ஒரு மாத காலத்துக்கு நீடித்தால் இலங்கைக் கடற்பரப்பைச் சுற்றியுள்ள பவளப்பாறைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிவடையும் அபாயம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

இலட்சத்தீவு கடல் மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதிகளில் கடுமையான பவளப் பாறை வெளுப்பு அபாயம் உருவாகியுள்ளது. வெப்பநிலையானது 27 தொடக்கம் 28 டிகிரி செல்சியஸ் வரையில் ஏற்ற இறக்கமாக இருந்தால், அது பவளப் பாறைகளின் ஆரோக்கியத்துக்குச் சரியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது காணப்படும் உயர்வெப்பநிலை இன்னும் ஒருமாத காலத்துக்கு நீடித்தால் பவளப்பாறைகளின் செயலிழப்பைத் தவிர்க்க முடியாதுபோகும். தற்போது இலங்கையில் 40 தொடக்கம் 43 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவுகின்றது என்றும் விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

வாக்கு வேட்டைக்கு

## சர்வதேச நாடுகளை கையாளும் ரணில்?



கொழும்பு, மே 10

வாக்குகளைத் தன்வசப்படுத்த சர்வதேச நாடுகளை உள்நாட்டு அரசியலுக்குப் பயன்படுத்தும் முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாள்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு ரணிலின் நிர்வாகம் தவறிவிட்டதாக முஸ்லிம் மக்களிடையே குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில் ஈரான் ஜனாதிபதியை இலங்கைக்கு வருமாறு அழைத்தமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் வாக்குகளைத் தமக்கான வாக்காக மாற்றுவதே எனப் பரவலாகப் பேசப்படுகிறது.

அத்துடன், காஸாவுக்கான நிதியுதவியும் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுவதாகவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

## லஞ்சம் பெற்ற பொலிஸார் கைது



கொழும்பு, மே 10

2 இலட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட மூவர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், மே 10

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சிறப்பு அபிஷேக பூசைகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார். (ச-17)



## வித்தியானந்தனின் உருவப்படம் யாழ். போதனாவில் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும், பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் உருவாக்கத்துக்கு வித்திட்டவருமான பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படம் யாழ். போதனா மருத்துவமனையின் அருங்காட்சியகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனை மன்றத்தின் ஏற்பாட்டில், யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், புலம்பெயர் தேசங்களிலிருந்து வருகைதந்த பேராசிரியர் வித்தியானந்தனின் பிள்ளைகள், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், மருத்துவமனையின் பணியாளர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-66,125)

## வீடமைப்புத் திட்டத்துக்கு 112 பயனாளிகள் தெரிவு

சாவகச்சேரி, மே 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடத்துக்கான வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 112 பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தலா பத்து லட்சம் ரூபா பெறுமதியான 100 வீடுகளையும், தலா 6 லட்சம் ரூபா பெறுமதியான 12 வீடுகளையும் அமைத்துக் கொடுப்பதற்காக குறித்த பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குப்பைமேட்டால் சூழல்பாதிப்பு இளையோர் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 10

**இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர்ப் பிரதேசசபையின் திண்மக் கழிவு அகற்றும் நிலையத்தால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புக்கு எதிராகவும், அதனைச் சூழவுள்ள கிராம மக்கள் எதிர்கொண்டுள்ள சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டியும் கிராம இளைஞர்களின் ஏற்பாட்டில் திண்மக் கழிவு நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

திண்மக் கழிவகற்றும் நிலையக் குப்பைமேட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு திடீரெனத் தீப் பரவல் ஏற்பட்டது. யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர், நல்லூர்ப் பிரதேசசபை ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் குப்பைமேட்டிலிருந்து புகை தொடர்ச்சியாக வெளிவந்தமையால், அந்தப் பகுதி மக்கள் சுவாசம் மற்றும் சுகாதார ரீதியான பாதிப்புகளை எதிர்கொண்டனர். இதன் விளைவாகவே கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்படுமெனப் போராட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள் தெரிவித்தனர். (ஒ-66)



யாழ்.மாவட்டத்தில்

## 65 கிராமஅலுவலர்களுக்கு நியமனக்கடிதம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ்.மாவட்டத்தில் கிராமஅலுவலர் நியமனத்துக்காகப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 65 பேருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட கிராமஅலுவலர்களுக்கான நியமனங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை கொழும்பு அலரிமாளிகையில் வைத்து வழங்கிவைத்தார்.

நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், மாவட்டச் செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-66)

## கழிவகற்றல் செயற்பாடு தெளிவூட்டல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 10

சாவகச்சேரி நகரசபையால் கழிவகற்றல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வரியிறுப்பாளர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் நேற்றுமுன்தினம் நகரசபைச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (ச-9)

## இரண்டு வருடங்களில் 1.3 மில். மின்துண்டிப்பு

கொழும்பு, மே 10

2022ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மின்சாரக் கட்டணங்கள் தாமதமாகச் செலுத்தியதன் காரணமாக சுமார் 30 மில்லியன் சிவப்பு பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 1.3 மில்லியன் நுகர்வோரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (ச-இ)

# யாழில் அனைத்து மருத்துவமனைகளிலும் தற்போது நீரிழிவுச் சிகிச்சை மையங்கள்!

## மருத்துவக் கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ். மாவட்டத்தில் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் தற்போது நீரிழிவுச் சிகிச்சை நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் நீரிழிவு நோயாளர்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனின் மணிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் யாழ்.நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன்போதே மருத்துவக்கலாநிதி கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். (ம-66)

## புதினம் தெரியுமோ?

'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' பரம்பரையில வந்தனாங்கள் எண்டு மூச்சுக்கு முந்நூறு தரம் சொல்லிக் கொண்டு, கௌரவத்தைக் காக்கிறதா நினைச்சு கவிண்டு கொட்டுண்டவை கனபேர். இப்பிடி ஒரு கௌரவம் பாக்கிற வேலையால ஒரு பள்ளிக்கூடமே அந்தரப்படுறது ஆருக்குத் தெரியும்?

தீவகத்தில உள்ள ஊர்காவற்றுறைக் கோட்டம், அங்கையுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில தான் இயங்குது. அந்தப் பள்ளிக்கூடத்துக்கும், கோட்டத்துக்கும் ஒரே கரண்ட் லைன் தான். அந்த கரண்ட் பில் கோட்டத்துக்கு வரும். அதைக் கோட்டக்காரர் வலயத்தில குடுக்க அவை மின்சாரசபைக்கு காசைக் கட்டுவினம். இதுதான் நடைமுறை. ஆனால் இப்ப ஒரு நாலைஞ்சு மாதத்துக்கு முதல், திடீரெண்டு 17 ஆயிரம் ரூபா கரண்ட் பில் காசு கட்டேலை எண்டு சிவப்பு நோட்டீஸ் வந்திருக்கு. உடனேயே கோட்டக் கல்விப்பணிப்பாளர் அதைக் கொண்டுபோய் வலயக்காரரிட்ட குடுத்திருக்கிறார். ஆனால் அதுக்குப் பிறகும் வலயக்காரர் வாய்பார்த்தலாலையோ என்னவோ, மின்சாரசபைக்காரர் வந்து அந்தக் கரண்ட் லைனைக் 'கட்' பண்ணிப்போட்டினம். வீடுகளில கரண்டை வெட்டினால், காசைக் கட்டினால் உடனேயே கரண்ட் வந்திடும். ஆனால் இந்த டிப்பார்ட்மெண்டுகளின்ர இழுபறி தெரியும்தானே. ஊர்காவற்றுறைக் கோட்டத்துக்கும், அது இயங்கிற பள்ளிக்கூடத்துக்கும் கரண்ட் வெட்டுப்பட்டு அஞ்சு மாதத்துக்கு மேல ஆகிட்டுது. இன்னும் அந்தக் காசும் கட்டுப்படேலை, கரண்டும் வரேலை. ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடக்கிற மீட்டிங்குகளில இந்தக் கரண்ட் பில்லைக் கட்டி, கனெக்சனை திரும்ப எடுங்கோ எண்டு கோட்டக்கல்விப்பணிப்பாளர் வாய் ஓயாமல் சொன்னதெல்லாம், புறக்குடத்து தண்ணியானதுதான் மிச்சம். உருப்படியா ஒண்டும் நடக்கேலை.

அப்பிடி வலயக்காரர் உந்த 17 ஆயிரம் ரூபா பில்லைக் கட்டாமல் இருக்கிறதுக்குக் காரணம், அவையின்ர கௌரவப் பிரச்சினையாம். வெட்டின கரண்டை திரும்ப குடுக்கிறதெண்டால், அதுக்கு பில் காசை விட மேலதிக தண்டப்பணமா மூவாயிரம் ரூபா கட்டவேணும். அந்தத் தண்டப்பணத்தைக் கட்டினால், 'ஏன் கரண்ட் வெட்டும் வரைக்கும் காசைக் கட்டாமல் இருந்தனீங்கள்? ஆர் அதுக்குப் பொறுப்பு?' எண்டெல்லாம் ஓடிட்காரர் வந்து நாக்கைப் பிடுங்கிற மாதிரிக் கேப்பினமாம். அதுக்காகத் தான் உந்தக் கரண்ட் காசைக் கட்டாமல் இழுத்தடிக்கினமாம். இவையின்ர உந்தக் கோதாரி விழுந்த கௌரவப் பிரச்சினையால, கோட்டக்கல்வி அலுவலகம் இருக்கிற பள்ளிக்கூடப் பிள்ளையள் தான் கஷ்ரப்படுகுதுகள். 'ராங்கில' (நீர்த்தாங்கி) ஒரு சொட்டுத் தண்ணி கூட இல்லை. மோட்டர் வேலை செய்யாமல் எப்பிடி 'ராங்கில' தண்ணி இருக்கும்? குடிக்கிறதுக்கோ, கை கழுவிறதுக்கோ, மலசலகூடம் போறதுக்கோ அந்தப் பிள்ளையளும், ரீச்சர்மாரும் தண்ணியில்லாமல் அஞ்சு மாதமா அந்தரப்படுகினம். அதைவிட இந்த வெக்கைக்கு ஒரு 'பான்' (மின்விசிறி) கூட போட வழியில்லை. ஆனால் பிள்ளையள் தண்ணியில்லாமல் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, எங்களுக்கு எங்கட கௌரவம் தான் முக்கியம் எண்டு இன்னும் வலயம் இதைப் பற்றி கணக்கிலயே எடுக்காமல் இருக்குதாம். நீங்களும் உங்கட கண்டறியாத கௌரவமும்...!

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)

*கற்பனை சக்தியில் சிறந்துவிளங்கிக் கலைஞர்களாகத் திகழும் கடகராசி அன்பர்கள்,*

அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆளுமைமிக்கவர்கள். இவர்கள் நினைத்ததை அடையும்வரை சோர்ந்துபோகமாட்டார்கள். எத்தனை தடைவந்தாலும் அதைத் தாண்டிக்குதித்து வெற்றி இலக்கை எட்டுவார்கள். நட்சத்திர மண்டலத்தில் புனர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயிலியம் முடிய கடக ராசியில் வரும். இப்படிப்பட்ட ராசிக்காரர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படி அமையும் என்பதைக் காண்போம்.




குருபகவான் இதுவரை உங்கள் உத்தியோகஸ்தானத்தில் அமர்ந்து எதையும் சரியாகச் செய்ய விடாமல் தொல்லை செய்துகொண்டிருந்தார். மேலும் அஷ்டம சனியால் ஏகப்பட்ட பிரச்சினைகளையும் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

தொட்ட செயல்களில் எல்லாம் தோல்வி, விரக்தி சூழ்ந்துகொண்டிருந்தது. அதிலும் குருபகவான் பூரண சுபர். அவர் உங்கள் கஷ்டங்களில் இருந்து விடுவித்து சுதந்திரமாக சுவாசிக்கச் செய்யப்போகிறார்.

பணவரவில் இருந்த தடை நீங்கும். பொன், பொருள் சேரும். தடைப்பட்ட சுபகாரியங்கள் குடும்பத்தில் ஏற்பாடாகும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். எதிர்காலத்துக்காகச் சேமிக்கத் தொடங்குவீர்கள். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

ராசிக்கு 5 ஆம் இடமான விருச்சிகராசியை குருபகவான் பார்ப்பதால் பிள்ளைகள் இனி நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள். அவர்கள் மூலம் பெருமை உண்டு. அவர்களின் கல்வி திருமண முயற்சிகள் பலன்தரும். பூர்விகச் சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

ராசிக்கு 7 ஆம் வீடான மகரத்தை குருபகவான் பார்ப்பதால் இனி உற்சாகமாக இருப்பீர்கள். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் விலகும். பணவரவும் உண்டு.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

1.5.2024 முதல் 12.6.2024 வரை உங்களின் தனாதிபதியான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் திடீர்ப் பணவரவு உண்டு. பிரபலங்கள் உதவுவார்கள். சமாளிக்க முடியாத பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

12.6.2024 முதல் 19.8.2024 வரை மற்றும் 2.12.2024 முதல் 5.4.2025 வரை உங்கள் ராசிநாதனான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் பிரபலமாவீர்கள். வருமானம் உயரும்.

19.8.2024 முதல் 2.12.2024 வரை மற்றும் 5.4.2025 முதல் 14.5.2025 வரை உங்களின் பிரபல யோகாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் நினைத்த காரியங்களை முடிப்பீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும்.

**உத்தியோகம்**

தள்ளிப் போன பதவியுயர்வு, சம்பள உயர்வு இனி தடையில்லாமல் கிடைக்கும். மூத்த அதிகாரியிடமிருந்து அலுவலக ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். வேலைச்சுமை குறையும். தலைமைப் பொறுப்பு தேடிவரும்.

**இந்த குரு மாற்றம் சிக்கல்களிலிருந்து உங்களை விடுவிப்பதுடன், திடீர் வளர்ச்சியையும், வெற்றியையும் தருவதாக அமையும்.**

# தொழில் முயற்சியாளரை ஊக்குவிப்பதற்குத் தயார்!

## டேவிட் பீரிஸ் குழுமத் தலைவர் ரோஹன திஸாநாயக்க தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 10**

**வடக்கின் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு, முன்னணி தகவல் தொழில்நுட்பக் கம்பனியும், டேவிட் பீரிஸ் குழுமத்தின் துணை நிறுவனமுமான 'டி.பி இன்ஃபோடெக் லிமிடட்' எனும் நிறுவனம் தயாராக இருப்பதாக டேவிட் பீரிஸ் குழுமத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் டி.பி.எம்.சி. பிராந்திய அலுவலக வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புதுமை மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் ஆற்றல்வாய்ந்த பணிச்சூழலை உருவாக்குவது எமது நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக அமையும் வகையிலான டி.பி.ஐ.என். இன் மாற்றத்தை இந்த நிலையம் பிரதிபலிக்கின்றது.

இந்த அபிவிருத்தி நிலையத்தை நாம் திறந்துவைப்பதன் மூலம் புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், அதன் செயற்பாடுகளில் செழித்தோங்குவதற்கு எமது பணியாளர்களுக்கு சுதந்திரம் இருக்கும் என்றும் நாம் நம்புகின்றோம்.

வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இது அமைந்துள்ள நிலையில் முற்போக்கான நாட்டை உருவாக்கவும், வளர்ப்பதற்கும் உதவும் வகையில் உள்ளூர் சமூகங்களின் உண்மையான திறனை அடைவதற்கு வாய்ப்புகளை உருவாக்கி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் யாழ்.பல்கலைக்கழகத்தையும் இணைத்து முன்னோக்கிச் செல்வதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றார்.

(ப-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். இன்று தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நன்று.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். அம்பிகையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.. மகிழ்ச்சி உண்டாகும். ஆஞ்சநேயரை வழிபடுவது சிறப்பு. தர்ம சங்கடமான நிலைமை ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எப்போதும்போல் நடைபெறும்.

**துலாம்:** எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தாய்வழி உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**விருச்சிகம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். காரியம் அனுகூலமாக முடியும். அனுசரணையாக நடந்துகொள்ளவும். வைரவர் வழிபாடு பலன் தரும்.

**தனுசு:** உற்சாகமான நாள். செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். அம்பிகையை வழிபடுவது நன்று.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். முருகப்பெருமானை வழிபட நன்மை அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவது சிறப்பான பலன்களைத் தரும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## வெம்மையைத் தணிக்கும் அறப்பணிகள்

முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது வெயில் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டில், 'எல் நினோவின் தாக்கம் வரலாற்று ஆபத்தை ஏற்படுத்தும்' என்று புவியியலாளர்களும் சூழலியலாளர்களும் எச்சரித்திருந்த நிலையில், இந்த எச்சரிக்கைகளை விடவும் மேலானதாகவே அதன் ஆபத்தம்சங்கள் அதிகரித்திருக்கின்றன. கிராமப் புறத்தில் வசிக்கும் மக்கள், பசுமைசார் சூழலால் வெயிலின் தாக்கத்தில் இருந்து ஓரளவு தப்பித்துக் கொண்டாலும் நகரப் பகுதியின் கதையோ அதோகதிதான். பல்வேறு தேவைகளுக்காக நகரப் பகுதிகளை நாடும் அப்பாவிப் பொதுமக்களும், அடித்தட்டு மக்களும் காய்ந்து கருவாடாகி வலுவிழந்து பலமிழந்து நடந்துதிரியும் காட்சிகளை இப்போது இலகுவாகக் காணக்கிடைக்கின்றது. வெம்மையின் தாக்கம் தவிர்க்கப்பட முடியாததுதான். ஆனால், வெம்மைத் தாக்கத்தில் இருந்து எம்மவர்களைக் காப்பாற்ற வழியில்லையா? என்ற கேள்வி இதயத்தின் ஒரு மூலையில் துருத்தவே செய்கின்றது. இங்குதான் தாகசாந்தி நிலையங்கள் அமைத்தல், தண்ணீர்த் தொட்டிகள் நிறுவுதல், தண்ணீர்த் தட்டுப்பாடான பிரதேசங்களுக்கான இலவச குடிநீர் விநியோகம், நிழற்குடைகள் அமைத்தல், வெம்மையால் உண்டாகும் நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம்களை நடத்துதல் போன்ற அறப்பணிகளின் அவசியம் மேலெழுகின்றது.

தொண்டு நிறுவனங்களின் பணிகளும், வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்ளும் அறப்பணிகளும் ஒரு சமூகத்துடன் இரண்டறக் கலந்தவை. ஒரு சமூகம் கல்வியிலும் -கலைகளிலும்-கலாசாரத்திலும்-இடர்பாடுகளின்போதும் நேரானதும் சீரானதுமான பாதையில் பயணப்பட வேண்டுமாயின், தனியார் நிறுவனங்களினதும் தொண்டு நிறுவனங்களினதும் வகிபங்கு அங்கு தவிர்க்க முடியாததும் காலத்தேவையானதுமாகும். இது உலக நியதி. வெறுமனே அரச திணைக்களங்களாலும் - அரச நிறுவனங்களாலும் மட்டும் அறப்பணிகளை-சமூக நலன்சார் செயற்றிட்டங்களை மேற்கொள்ளமுடியாது. நிதி ஒதுக்கீடு, ஆளணி போன்ற ஏகப்பட்ட சவால்களை இந்தப் பணிகளின்போது சந்திக்க வேண்டியிருக்கும். ஆதலால்தான், அரச நிறுவனங்களின் இயலுமைக்கு அப்பாற்பட்ட வகிபங்கு இந்த விடயங்களில் எதிர்பார்க்கப்படுகின்றதுடன், அது தவிர்க்கப்பட முடியாததாகவும் இருக்கின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர்தின்ற பூமியான வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்படுகின்ற அனேகமான அறப்பணிகள் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளப்படுகின்றனவே அன்றி, ஒரு முறையான பலமான நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பு இங்கில்லை. இதுவொரு பெருங்குறை. நிறுவனமயப்படுத்தப்பட்ட அந்தக் கட்டமைப்பு இருந்திருந்தால் எல் நினோ வெம்மை மற்றும் அதீத மழைபோன்ற இடர்பாடுகளில் இருந்து மக்களினதும், நாட்டினதும் மீட்சி மிக இலகுவில் வசப்படும் விடயமே பொருளாதாரச் செயற்றிட்டங்கள் முதல் தற்காப்புச் செயற்றிட்டங்கள் வரையில் எண்ணற்ற திட்டங்களை இந்த வெம்மைக் காலத்தில் செயற்படுத்தியிருக்கலாம். ஆனால், அறப்பணிகளுக்கும், தாயகத்தில் நிலைபெற்றிருக்கும் ஏராளமான தனியார் நிறுவனங்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லா நிலையே காணப்படுகின்றது.

இரை வலுவிழக்கும் வரையில் காத்திருந்து கொன்றுண்ணும் பிணம்தின்னிக் கழுகுகளைப் போன்றுதான் இங்குள்ள பல தனியார் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இயற்கை இடர்பாடுகளால் அதிகம் பாதிக்கப்படும் கனடா, தென்அமெரிக்கா போன்ற நாடுகளில் வர்த்தக நிறுவனங்களின் அறப்பணிகளே அந்த நாடுகளையும் மக்களையும் பல்வேறுபட்ட இடர்பாடுகளில் இருந்து தூக்கிவிட்டிருக்கின்றன. கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த வருடம் ஏற்பட்ட உலகின் ஆகப்பெரும் காட்டுத்தீயின்போது, 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்றவாறாக வர்த்தக நிறுவனங்கள் செயற்படுத்திய அறப்பணிகளே அந்தப் பேரிடரில் இருந்து கனடாவை மீட்டெடுத்தன. இந்தக் கலாசாரத்தை மேற்கத்தேயப் பொருளாதாரப் பண்புகளை இலங்கைக்குள் வளர்த்தெடுக்கும் போதுதான் நீடித்த அபிவிருத்தி என்பது சாத்தியமாகும்.






## ஈரானியர்களை வரவேற்கிறோம்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

**கொழும்பு, மே 10**

**இலங்கைக்கு வரும் ஈரானியர்களை வரவேற்கின்றோம். அணிசேரா வெளிவிவகாரக் கொள்கையால் நாம் பெருமையடைகின்றோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாங்கள் சர்வதேச சட்ட வரையறைகளைப் பின்பற்றியே வெளிநாடுகளுடன் உறவுகளை மேற்கொண்டு வருகிறோம். நாங்கள் முதலீட்டாளர்களை வரவேற்கிறோம். ஈரானிய விமானங்கள் சுற்றுலாப் பயணிகளுடன் வரவிருக்கின்றன. அவர்களை வரவேற்க நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். அணிசேரா கொள்கையைப் பின்பற்றி வருவதையிட்டு நாங்கள் பெருமையடைகின்றோம். எமது நாடு எந்த அணியுடனும் சேராத இறைமையுள்ள நாடாளுமன்றத்தை கொண்டுள்ள நாடு - என்றார். (ம-6)

## கட்டுப்பணத்தை கட்டுப்படுத்துக!

கொழும்பு, மே 10
வரவிருக்கும் தேர்தல்களில், வேட்பாளர்களின் கட்டுப்பணம் மிகையாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி முன்னிலை சோஷலிசக் கட்சி தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் எழுதியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருக்கான கட்டுப்பணம் 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சுயேச்சை வேட்பாளருக்கான கட்டுப்பணம் 75 ஆயிரம் ரூபாவிலிருந்து 31 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வகுப்பினர் அல்லது பிரிவினரை மட்டுமே தேர்தலில் போட்டியிட வாய்ப்புகளை வழங்கும் என்றும் அந்தக் கடிதத்தில் முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது. (ம-6)

## வழக்கு!

லஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணைக்குழுவின் பணிப்பளார் நாயகமாக கனிஷ்க விஜேரத்னவை நியமித்தமை தவறு என ட்ரான்ஸ்பரன்சி இண்டர்நஷனல் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.
ஏற்கனவே பணிப்பாளர் நாயகமாகப் பதவிவகித்த ஒருவரை மீண்டும் அதே பதவிக்கு நியமித்தமை தவறு என ட்ரான்ஸ்பரன்சி இண்டர்நஷனல் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-6)

## கெஹலியவின் இல்லத்தை விரைவில் திரும்பப் பெறுக

### இலஞ்ச ஊழல் எதிர்ப்புக்குழு உத்தரவு

கொழும்பு, மே.10
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் வாகனத்தையும் இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலஞ்ச ஊழல் ஒழிப்புக்குழுவின் பணிப்பாளர் நாயகம் விஜயரத்ன சுகாதார அமைச்சு செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (ம-6)

## ஒப்பந்தத்தின் பின்னரே இலகு ரயில்

இலங்கையோடு புதிதாக ஒப்பந் தம் ஒன்றைச் செய்த பின்னரே இலகு ரயில் திட்டத்தை நடை முறைப்படுத்துவோம் என்று ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜப்பான் அரசாங்கத்தின் இந்த உதவியை ஜனாதிபதி கோத்தாபய நிராகரித்திருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் அந்தத் திட்டத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

**நாளை**

11.05.2024
**சனிக்கிழமை**
**சித்திரை - 28**
நல்லநேரம் : [illegible] - 04.24
ராகுகாலம் : 08.54 - 10.24

சதுர்த்தி விரதம்

**நாளொரு நல்வார்த்தை**

**தன்னை உயர்ந்த ஜாதியாகவும்**
**இன்னொரு மனிதனை**
**தாழ்ந்த ஜாதியாகவும்**
**கருதுபவன் மன நோயாளி**
**- அம்பேத்கர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அரசியல் சக்தியை தமிழ் மக்கள் நம்பக்கூடாது

### சிவராம், ரஜிவர்மன் அஞ்சலிப்பில் பேராசிரியர் ரகுராம் திட்டவட்டம்




**யாழ்ப்பாணம், மே 10**

**சிங்கள அரசியல் சக்திகளை தமிழர்கள் ஒரு போதும் நம்பவேமுடியாது. சிங்கள அரசியல் சக்திகளுக்கான ஆதரவாக தமிழர் தரப்பின் நிலைப்பாடு எப்போதுமே இருக்கமுடியாது. அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்படுமாக இருந்தால் அது தவறான வழிகாட்டலாகத் தான் இருக்கும் என்று பேராசிரியர் ரகுராம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்கு அரசியலை சிவராம் நன்றாக உணர்ந்திருந்தார். தெற்கு அரசியலில் அவருக்கு ஆரம்பத்தில் ஒரு நாட்டம் இருந்தது. ஆரம்ப காலங்களில் அவர் சார்ந்த அமைப்பு ஜே.வி.பி.யுடன் கொண்டிருந்த தொடர்புகள் வழியாக தெற்கிலே எங்களுடைய நியாயங்களை எங்களுடைய போராட்டத்தின் வலுவை எங்களுடையபோராட்டத்தின் செல்நெறியை எடுத்துச் செல்லலாம் என்ற மிகப்பெரிய ஆர்வம் அவரிடம் இருந்தது.

அதனை அவரது பல எழுத்துகளிலும் வெளிப்படுத்தியிருந்தார். தெற்கில் உள்ள புத்திஜீவிகள், அரசியல் கட்சியினர், சிவில் சமூகத்தினர், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலதரப்பினருடன் பல சந்திப்புகளையும் சிவராம் நடத்தியிருந்தார். அவருக்கு ஏராளம் சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். பத்திரிகை நண்பர்கள், ஊடகவியலாளர்கள், கட்சித் தரப்பினர் என பலருடன் நெருங்கிய தொடர்புடன் இருந்தார். ஆனால் அவர் ஒரு கட்டத்தில் மிகத்தெளிவான ஒரு முடிவுக்கு வந்தார். சிங்களத்தை நாங்கள் மாற்றமுடியாது. சிங்கள அரசியல்வாதிகளை நாங்கள் மாற்றமுடியாது. சிங்கள அரசியல் சூழலை எங்களால் மாற்றமுடியாது என்ற தெளிந்த நிலைப்பாட்டுக்கு சிவராம் வந்தார்.

அவர் சந்தித்த பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சியினர் என சகல தரப்பினரும் ஒரு வரையறைக்குள் இருந்தார்கள். ஆழமாக அவர்களுக்குள் இறங்கியிருக்கக் கூடிய கருத்தியல் தளத்துக்கு அப்பாலே அவர்கள் எங்களுக்காக சிந்திப்பார்கள் அல்லது எங்களுடைய நியாயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதெல்லாம் ஒரு பொய்க் கதை என்பதை அவர் மிகத் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர்களாகிய நாங்கள் இன்று அந்தச் சந்ததியில் தான் வந்து நிற்கின்றோம். எந்தக்கட்டத்திலும் சிங்கள அரசியல் சக்திகளை, சிங்கள அரசியல்வாதிகளை, அடுத்துவரக்கூடிய ஆளும் தரப்புகளை நாங்கள் நம்பவே முடியாது என்பதனை அன்றில் இருந்து இன்றுவரை வரலாறு எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிவந்தாலும் கூட அதை மறுத்து நாங்கள் குறுக்கோட்டம் ஓடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றோம்.

விஞ்ஞானபூர்வமான முடிவுகளே தேவை சிங்களத்தின் இன்றைய அரசியல் சூழலோடு சிவராம் அண்ணாவை மீட்டுப் பார்க்கின்றபோது எங்களுக்குக் கிடைக்கின்ற முக்கியமான செய்தி நாங்கள் யாரையும் நம்பமுடியாது. எவரையும் நம்பமுடியாது. யாருக்காகவும் எங்கள் பெறுமதியான வாக்குகளை அளிக்கவும் முடியாது என்பதேயாகும். ஆகவே எங்களுக்கு இருக்கக்கூடிய சரியான தெரிவு எதுவென்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது, வாக்களிப்பதைத் தவிர்ப்பது என இரண்டு தெரிவுகள் எமக்கு இருக்கின்றன. இவற்றில் எது சரியானது என்பதை நாங்கள் விஞ்ஞான பூர்வமாக அறிவியல்பூர்வமாகத் தெரிவு செய்யவேண்டும்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளுமே ஒருமித்த புள்ளியில் இருப்பதை நான் பார்க்கிறேன். அது சிங்கள அரசியல் சக்திகளை நாங்கள் நம்பமுடியாது என்பதாகும். நாங்கள் இந்தத் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாகவோ நிராகரிப்பதாகவோ இருந்தாலும் சரி, பொதுவேட்பாளரை தேடுவதாக இருந்தாலும் சரி இந்த இரண்டு நிலைப்பாடுகளுமே ஏதோ ஒரு வகையில் அந்தப் புள்ளியில்தான் வந்து நிற்கின்றன. அது நாங்கள் தெற்கு அரசியல் சக்திகளை நம்பமுடியாது. எதிர்காலத்துக்காக நாங்கள் எங்களை பணயம் வைக்கமுடியாது என்பதைத்தான் சொல்கின்றன. எனவே நாங்கள் சரியான முடிவை கட்சி சார்ந்ததாக இல்லாமல், மக்களை முன்னிறுத்தியதாக எடுக்க வேண்டும் - என்றார். (ம-100)



## கையிருப்பு அதிகரிப்பு

**கொழும்பு, மே 10**

கடந்த மார்ச் மாதம் வரை மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பின் அளவு அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் வர்த்தகப் பொருள்களின் ஏற்றுமதி வருமானம் ஆயிரத்து 139 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 9.8 வீத அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளதுடன் வெளிநாட்டு ஊழியர்களின் பணம் மார்ச் மாதத்தில் 572 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. என்றும் இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

## வெற்றிலை மென்றபடி வியாபாரம்

### ஐவருக்கு வழக்குப் பதிவு

**சாவகச்சேரி, மே 10**


சாவகச்சேரி பொதுச்சந்தையில் வெற்றிலை மென்றபடி வியாபாரத்தில் ஈடுபட்ட ஐவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழு, சாவகச்சேரி பொதுச்சந்தையில் கடந்த வியாழக்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை முன்னெடுத்தது.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத பழுதடைந்த மரக்கறி வகைகள், பழவகைகள், கடலுணவுகள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் வெற்றிலை மென்றபடி வியாபாரத்தில் ஈடுபட்ட ஐவர் மீது வழக்குப் பதிவும் செய்யப்பட்டுள்ளது. (ச-9)

## ஈரான் – இலங்கை கூட்டு கடுகடுக்கிறது இஸ்ரேல்!



**கொழும்பு, மே 10**

ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தமை குறித்து இஸ்ரேல் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதுவர் நாபீர் கிலன் தெரிவிக்கையில், இலங்கையின் செயற்பாடு அதிருப்தியளிக்கிறது. அணிசேரா நாடு என இலங்கைதன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. இஸ்ரேல் மீது 350 க்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவிட்டு சில வார இடைவெளியில் ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வந்துள்ளார். இதனைத் தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கிறோம் என்றார். (ச-இ)

### அதிக முறைப்பாடுகளுக்குத் தீர்வு

## மானிப்பாய் பொலிஸுக்கு விருது

**யாழ்ப்பாணம், மே 10**

வீட்டு வன்முறைக்கெதிராக அதிக முறைப்பாடுகளைப் பதிவு செய்தமை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தமைக்காக, மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸ்மா அதிபரால் விருது வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலகவின் விசேட வழிகாட்டலில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-125)

## கண்ணிவெடி இல்லா நாடாக இலங்கை விரைவில் மாறும்!

**கொழும்பு, மே 10**

வடக்கு- கிழக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கு இன்னும் 23 சதுர கிலோமீற்றரே எஞ்சியுள்ளது. அடுத்த மூன்று வருடங்களில் இலங்கை கண்ணிவெடிகள் இல்லாத நாடாகும் என்று சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவிலுள்ள சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெற்ற மனிதாபிமான கண்ணிவெடி ஒழிப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பெண் படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் குடத்தனை வலிகண்டிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்தில் இந்திர ராஜா சிந்துஜா (வயது - 27) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (சு-100)

## இந்தியத் தேர்தலில் சர்வதேச அவதானம்

புதுடில்லி, மே 10

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நடைபெறும் 18ஆவது மக்களவைத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் நடைமுறைகளை இலங்கை, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 11 பேர் கொண்ட சர்வதேச பிரதிநிதிகள் குழுவினர் பார்வையிட்டனர். இந்தியாவில் மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெறுகிறது. ஏப்ரல் 19, ஏப்ரல் 26 ஆகிய இரண்டு திகதிகளில் முதல் இரண்டுகட்ட வாக்குப் பதிவுகள் இடம்பெற்றன. மூன்றாவது கட்டத் தேர்தல் மே ஏழாம் திகதியன்று குஜராத் உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களிலும், கர்நாடகா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களிலும் நடைபெற்றது. இதன் போது இலங்கை, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 11 பேர் கொண்ட சர்வதேச பிரதிநிதிகள் குழுவினர் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல் நடைமுறைகளை பார்வையிட்டனர். (ம)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இசை அர்ப்பண அழைப்பும்



கடந்த 08.04.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

சுருதி வேந்தன் கலாபூஷணம்

**அம்பலவாணர் ஜெயராமன்**

**(வயலின் வித்துவான்)**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், இசை அர்ப்பணமும் நிகழ்வானது நாளைமறுதினம் (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் A1 **ராஜா கிறீம் ஹவுஸ் "சரஸ்வதி மண்டபம்" இல.17, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில்** நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு : இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

இல. 07, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 9762, 077 028 7132


குடும்பத்தினர்

(cr. 42396) (N-1)



### மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 10 . 1944



மறைவு 08 . 05 . 2024

**இராசகுமாரி செல்வரட்ணம்**

பண்டதரிப்பைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசகுமாரி செல்வரட்ணம் நேற்று முன்தினம் (08.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்வராணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், அன்புழகன், ரவீந்திரன், சற்குணநாயகி, கலநாயகி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, தவேந்திரராசா, ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் தவகுமாரி, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கோண்டாவில் நாகபூசணி அம்மன் வீதி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

N0.28, நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
இராசையா இந்திரராசா
077 869 7296

(CS 55003) (N-1)



### 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 . 09 . 1935



விண்ணில் 10 . 05 . 2022

மண்டைதீவு, 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

**கணபதிப்பிள்ளை அமிர்தமணி**

நீங்கள் எங்களை பிரிந்து சென்று
இன்றோடு ஆண்டு இரண்டு ஆனதே!
உங்கள் இன்முகமும் புன்சிரிப்பும்
எங்கள் மனதை விட்டகலவில்லை
எங்களை எல்லாம் கண்ணீர்
கடலில் மூழ்க விட்டு எங்கு
சென்றீர்கள் அம்மா
கலப்படம் இல்லா உன் அன்பு
கலங்க வைக்குது எனை இங்கு
எங்களைத் தனிமையில் விட்டதில்லை
இன்றோ தவிக்க விட்டுச் சென்று விட்டாய்
உனைப்பிரிந்து உறவுகள் வாடுதம்மா
உன் சிரிப்பின்றி உறவுகள் உறங்கவில்லை
அம்மா என்றழைக்க அம்மா நீங்கள்
இல்லையே அடிமனதில் வலி துடிக்க
உயிரோடு வாழ்கின்றோம்!
என்றும் உம் பிரிவால் வாடும் அன்பு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்..!!!!


Swiss Burgdorf

(CS/54984) J-1



### 31ஆம் நாள் நினைவலைகள்

மண் மகிழ 07 . 05 . 1936



மண் நெகிழ 10 . 04 . 2024

**தம்பிஐயா குமாரசாமி**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

மிசாலை கிழக்கு,
மிசாலை.

குடும்பத்தினர்

(cr.42401) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துர்நடத்தை; வீடு சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் இயங்கி வந்த பாலியல் துர்நடத்தைக்குப் பயன்படுத்தப்படும் வீடு ஒன்று நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது.

இதன்போது இரு பெண்களும், ஆண் ஒருவரும், வீட்டின் உரிமையாளரான முதியவருமாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், கைதானோரை நீதிமன்றத்தில்முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-27)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 24 . 11 . 1944



உதிர்வு 07 . 05 . 2024

செல்வி ரதீஸ்வரி அவர்களின் பாசமிகு தாயார்

**திருநாவுக்கரசு நகுலேஸ்வரி**

கண்கள் பல உனைத்தேட
காணாமல் மண்ணுலகை விட்டு சென்றதேனோ!
புன்னகை பூத்த பொன்முகம் மறைந்ததேனோ!
விதியின் வழியில் நீ சென்றாய்
உன் இழப்பதை நாம் தாங்காது தவிப்பதை
யார் அறிவார்....

அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்கின்றோம்.

நிர்வாகத்தினர், சங்க அங்கத்தவர்கள், ஊழியர்கள்
கூட்டுறவு நலவிருத்திச் சங்கம்
போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்.

(CS 450) A-1

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

கடந்த வருடம் 21.04.2023 அன்று
இறைபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவன்

அமரர்
**ஜெயந்திரன் நிஜந்தன்**
திதி துதியை (10.05.2024)



கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

வட்டக்குளம்,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
076 076 7996


அன்னை மடியில் 16.07.1987
இறைவன் அடியில் 21.04.2023

(CS/54951) J-1

## மரண அறிவித்தல்

### மார்க்கு மனுவேல்

(முன்னாள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர், நகரசபை எதிர்கட்சித் தலைவர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கு மனுவேல் நேற்று முன்தினம் (08.05.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் முன்னாள் பருத்தித்துறை நகரசபை உறுப்பினரும், நகரசபை எதிர்க்கட்சித் தலைவருமாவார். அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கு - நிக்கலாசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீமான்பிள்ளை, அல்பிரட், மரியாம்பிள்ளை, சந்தானநாயகி, பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லர் - பூரணம் தம்பதியரின் மருமகனும், சகாயமேரியின் அன்புக் கணவரும், ஜீவன், தேவன், வனிதா, ராசகுமார், டேவிட் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றோஸ்மலர், கவிதா, ரஜிதரன், ஜெனிஸ்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், லியோ, சாருசன், விதுர்சனா, பொபிசன், சஜினா, வசிகரன், லிவிசனா, அனுசியா, அன்டஸ்சன், ஆன்றியா, அக்சரா ஆகியோரின் பாசமுள்ள பேரனும், செரோபியின் அன்புப் பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இல: 55, 4ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை

தகவல்:
குடும்பத்தினர்
075 211 0726

(CS/449) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 09 . 1947



மறைவு 09 . 05 . 2024

### நடராசா பாலசுப்பிரமணியம் (கிளி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09.05.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சுபத்திரை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற காந்தரூபி அவர்களின் கணவரும், ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா), திருமதி மனோரஜி (மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு), திருமதி நித்திய ரஜி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


43/5, உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 077 5907

(CS 00451) S-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 02 . 08 . 1942



ஆண்டவன் அடியில் 08 . 05 . 2024

### கனகேந்திரம் பொன்னுத்துரை

நவாலியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகேந்திரம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (08.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகேந்திரம் -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ராஜப்பு - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பனிபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், தர்ஷினி (ஹொரண்ட்), ஜூட்சுதர்ஷன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான ஜூட்கஷன், ஜூலிசுதர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ், ராதிகா ஆகியோரின் மாமனாரும், அஷேர், ஜோய்சி, ஜேய்ஸ், ஏசாந்த் ஆகியோரின் பாசமிகு பேரனும்,காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நாகேஸ்வரி மற்றும் செல்லத்துரை, பொன்மணி, இராசதுரை, காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் இராசலிங்கம், காலஞ்சென்ற புனிதராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிசிலியா, ரஞ்சிதமலர், லூயிஸ் ஞானசேகரம், ஞானமலர், ஜெகமலர், ரதிமலர், செல்வமலர், ஜெகசேகரம், பிரான்சிஸ் குணசேகரம், ரெஜினா குணமலர், டொனால்ட் விஜயசேகரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகம் புதுமை மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக மல்லாகம் குளமங்கால் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

077 459 4977 - மனைவி
+41 791 923 112 - மகன்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/28546) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலியின் சூறாவளியில் பஞ்சாகியது பஞ்சாப்

தர்மசாலா, மே 10

**விராட் கோலியின் சூறாவளி ஆட்டத்தால் பஞ்சாப் அணியை பஞ்சாக பறக்கச் செய்த வெற்றியோடு, 'ப்ளே - ஒப்' செல்லும் வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி.**

தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. வாழ்வா, சாவா? என்ற இந்தப் போட்டியில் களமிறங்கிய பெங்களூர் அணி, ஆரம்பத்தில் இருந்தே ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஒரு முனையில் அணித்தலைவர் பிளஸிஸ் 9, பில் ஜாக்ஸ் 12 என சொற்ப ஓட்டங்களோடு ஆட்டமிழந்திருந்தாலும், ரஜத் பட்டிதாருடன் இணைந்து நட்சத்திர வீரர் விராட் கோலி ருத்ரதாண்டவம் ஆடத் தொடங்க, அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென்று உயரத் தொடங்கியது. ரஜத் பட்டிதார் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதமடிக்கும் நிலைக்குச் சென்ற கோலி, அதிரடியாக ஆட நினைத்து அர்ஷ்தீப் சிங்கின் பந்தில் பிடிகொடுத்து 92 ஓட்டங்களோடு வெளியேறினார். பின்னர் வந்த வீரர்களில் கமரூன் கீறினைத் தவிர ஏனையோர் சொற்ப ஓட்டங்களோடு களத்தை விட்டு அகல அணியின் ஓட்ட எண்ணிக்கை 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 241 என்ற இலக்கைத் தொட்டது.

242 என்ற இமாலய இலக்கைத் துரத்தத் தொடங்கிய பஞ்சாப் அணியும் அதிரடியில் கலக்கத் தவறவில்லை. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ப்ரப்சிம்ரன் சிங் 7 ஓட்டங்களோடு வெளியேறினாலும், மூன்றாம் நிலை வீரராகக் களம் புகுந்த ரூஸோவின் காட்டடியில் பெங்களூர் கதிகலங்கத் தொடங்கியது. அவருக்குப் பக்கபலமாக ஆடிய பெயார்ஸ்டோ 27 ஓட்டங்களோடு வெளியேற உள்ளே நுழைந்தார் பஞ்சாப் அணியின் தூண் என்று வர்ணிக்கப்படும் ஷஷாங் சிங். ஆனாலும் பெங்களூர் பந்துவீச்சை வெளுத்துவாங்கிய ரூஸோ 61 ஓட்டங்களோடு ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஜித்தேஷ் சர்மா வெறும் 5 ஓட்டங்களோடும், லிவிங்ஸ்டன் ஓட்டமேதும் எடுக்காமலும் நடையைக் கட்டினர். நம்பிக்கையளிக்கும் வகையில் ஆடிக்கொண்டிருந்த ஷஷாங் சிங் 37 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ரன் அவுட் முறையில் களத்தை விட்டு அகற்றப்பட, சீறும் பாம்பாகப் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்த பஞ்சாப் பெட்டிப் பாம்பாக அடங்கத் தொடங்கியது. அதன் பின்வந்தவர்களில் அணித்தலைவர் சாம் கரன் மட்டுமே 22 ஓட்டங்களை எடுக்க, ஏனையோர் வருவதும் போவதுமாக அணி நடை செய்துகொண்டிருந்தனர். இறுதியில் 17 ஓவர்களில் 181 ஓட்டங்களை எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது. வெற்றிக்கு காரணமான விராட் கோலி ஆட்டநாயகனாகத் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் 'ப்ளே- ஒப்' செல்லும் வாய்ப்பை பெங்களூர் அணி இழக்காதிருக்கும் அதேசமயத்தில், பஞ்சாப் அணி 'ப்ளே- ஒப்' வாய்ப்பை நேற்றைய தோல்வியோடு ஏறக்குறைய இழந்துவிட்டது. (அ)

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள
**தொழிற்சாலை ஒன்றிற்கு கணக்காளர் தேவை.**
அனுபவமுள்ள இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 075 771 8503
(CS/54999) J-1

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 26.01.1976



உதிர்வு 27.03.2024

கடந்த 27.03.2024 அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவன்

### குலலிங்கம் அகிலேந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதனால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.20, அம்மன் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம்,
வவுனியா.**

**குடும்பத்தினர்.
077 288 1132**

(CS 00453) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1925



மறைவு 09 . 05 . 2024

### திருமதி அன்னப்பிள்ளை சேரா இரத்தினசிங்கம் (சேரா ரீச்சர்)

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை S.R.இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை) அவர்கள் 09.05.2024 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற S.R. இரத்தினசிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, மார்க்கண்டு, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சூரியகலா, கிங்ஸ்லி, அனஸ்லி, சுசித்ரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தெய்வேந்திரன், Shirani Nirmali, இந்திரா வசந்தி, புவனேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஸ்தூரி, ரஜீவ் (உரிமையாளர் பூஜோ ரெஸ்ரூறண்ட்), சுஜீவன் (உத்தியோகத்தர் NSB), Dr. Sinclair Ryley (Innovative Scientist-TNO the Netharlands), Shelton (Attorney at Law-Germany), Medeallin (Attorney at Law-Germany), Ferdinand, தேனுகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), Dr.ருக்ஷிகா (கால்நடை வைத்திய நிபுணர்), சுவஸ்திகா (Research Consultant in remote Sensing at IWMI) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மெர்ஜா மியூரிக்கா, சர்ஜா ஸ்ருதிகா, அதிஸ்ரா, அதிஸயன், Amon Taro, அக்ஷரன் தியாஷ், யோவியன் எழில் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பரி யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**145/2 ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.**


தகவல்:
**குடும்பத்தினர்.
077 663 0169**

(CS 455) V-1

## மரண அறிவித்தல்

### நடராசா சரச்சந்திரன் (சந்திரன்)

**(ஓய்வுபெற்ற கூட்டுறவு முகாமையாளர்)**



யாழ்ப்பாணம் உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் சிறுகாலம் மன்னாரையும், தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சரச்சந்திரன் அவர்கள் நேற்று (09.05.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - அன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா கதிர்காமத் தம்பியின் பாசமிகு சகோதரனும், தியாகராசா - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும், டில்லிமலர், ஜெயந்தி, ஜெயலட்சுமி, இராசமனோகரி காலஞ்சென்ற ஜெயமதி, கௌரி, ஜெயதர்சினி, ஜெயதர்சன், ஜெயதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெயச்சித்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மன்னார்), ரவிசங்கர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யூடிசன் (நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்), பிறேமினி (ஆசிரியர், வட்டக்கச்சி, தமிழ் கலவன் வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தனுசியா, நியூசியன், றஞ்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 4589A-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி, யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் 12ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவில் குருதிக்கொடை முகாம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ப-213)




சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ம-66)

கலைமகள் அறநெறிப்பாடசாலை மாதாந்தம் நடத்தி வரும் போட்டித் தொடரில் சித்திரை மாதத்தில் தோரணம் பின்னும் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை ஆசிரியர் மனோகரன், ஆசிரியரும் யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தருமான கமலதாஸ், நிலைய உறுப்பினர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)




கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-159)





மன்னார் சாந்திபுரம் கிராமத்திலுள்ள 'வளரும் நட்சத்திரங்கள்' விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், கழகத் தலைவர் மரடோனாவின் தலைமையில், 'இணைந்த ஒருங்கிணைந்த கிராமம்' எனும் தொனிப்பொருளில் இந்த வருட சித்திரைப் புத்தாண்டு மற்றும் மே தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ப-213)



# மதுபோதைக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மதுபோதைக்கு எதிரான இயக்கம் நடத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கும், செயற்பாட்டாளர் கௌரவிப்பு நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றன.

'மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்' எனும் தலைப்பில், தந்தை செல்வா கலையரங்கத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. மதுபோதைக்கு எதிரான இயக்கத்தின் தலைவர் ச.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மதுபோதைக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் எட்டு அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன், சட்ட[illegible]வ அதிகாரி மருத்துவர் மயூரதன், யாழ்.போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுண[illegible]யோகன், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநி[illegible]ச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



குடத்தனை கிழக்கு, கொடிகாமம் வடக்கு மற்றும் தெல்லிப்பழை வீமன்காமம் தெற்கு ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் கல்வி ஊக்குவிப்பு உதவியாகப் புதிய சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்காப்...

தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உக்ரைனின் டொனஸ்க் பிராந்தியத்தில் இடம்பெற்ற மோதல்களிலும் அதன் அண்டிய பகுதிகளிலும் இலங்கையின் முன்னாள் இராணுவத்தினர் கூலிப்படைகளாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களில் 200 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதே எண்ணிக்கையானவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற முன்னாள் சிறிலங்காப் படையதிகாரிகளே என்னையும் ரஷ்ய - உக்ரைன் போர்முனையில் பணியாற்றத் தெரிவுசெய்தனர். அதற்காக 1.6 மில்லியன் ரூபா செலுத்தினேன். முகாமில் உதவியாளராகப் பணியாற்றும் வேலை எனத் தெரிவித்தனர். இந்திய பிரஜையான ரமேஸ் என்பவரே இந்த நடவடிக்கைகளின் சூத்திரதாரி. ரஷ்யாவில் தமிழில் பேசிய ஒருவர் எங்களை வரவேற்றார்.

சுற்றுலாப் பயணிகளுக்கான விசாவில் செல்லும் இலங்கையர்களை வாக்னெர் கூலிப்படையில் இணைப்பதற்காக ரஷ்ய மொழி ஆவணமொன்றில் கைச்சாத்திடவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். சட்டத்தரணி போன்று தோற்றமளித்த இந்தியப் பெண் ஒருவர் எங்களுக்கு உதவினார். அவர் முகாம் உதவியாளராகப் பணிபுரிவதற்கான ஒரு வருடகால ஒப்பந்தம் எனத் தெரிவித்தார். ஆனால் அங்கு நிலை ஒப்பந்தத்துக்கு மாறாக இருந்தது. எம்மோடு இருந்த சிறிலங்காவைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். என்னையும் போரில் ஈடுபடுத்தினார்கள். இதன் பின்னரே அங்கிருந்து தப்பியோடும் முடிவை எடுத்தேன் - என்றார். (ம)

## ஒலிம்பிக்...

பரிஸ் நகரில் கடந்த வருடம் சிறந்த பாண் தயாரிப்பில் முதலிடம் பெற்று நாட்டின் அதிபரது வசிப்பிடமாகிய எலிஸே மாளிகைக்குப் பாண் விநியோகிக்கின்ற பெருமையைப் பெற்றவரான தர்ஷன் செல்வராஜா என்பவரே ஆயிரக்கணக்கானோரில் ஒருவராகப் பரிஸில் ஒலிம்பிக் தீபம் ஏந்துவதற்குத் தெரிவாகியிருக்கிறார்.

ஒலிம்பிக் தீபம் ஏந்தப்படும் வாய்ப்பு அவ்வளவு இலகுவில் அனைவருக்கும் வழங்கப்படுவதில்லை. எதேன்ஸின் சூரிய வெளிச்சத்தில் இருந்து நேரடியாக ஏற்றப்படும் இந்தத் தீ, பின்னர் பல்வேறு நாடுகள் ஊடாக ஒலிம்பிக் தொடரை நடத்தும் நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். ஜூலையில் இடம்பெறவுள்ள பரிஸ் ஒலிம்பிக் தொடருக்கான தீ, பிரான்ஸின் பழமையான துறைமுகமான மார்செய் துறைமுகத்துக்கு படகுகள் அணிவகுத்துவர பாய்மரக் கப்பலில் நேற்றுமுன்தினம் கொண்டுசெல்லப்பட்டது.

தொடர்ச்சியாக பிரான்ஸின் பல்வேறு பகுதிகளுக்கு உச்சகட்ட பாதுகாப்புடன் ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லப்படவுள்ளது. ஏதாவது துறைகளில் சாதித்து தமக்கான அங்கீகாரத்தைத் தேடிக் கொண்டவர்களுக்கு ஒலிம்பிக் பந்தத்தை ஏந்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே பரிஸ் பிராந்தியத்தில் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் அரிய வாய்ப்பு ஈழத்தமிழரான தர்ஷன் செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தர்சன் செல்வராஜா இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து 2006ஆம் ஆண்டு பிரான்ஸுக்குச் சென்றிருந்தார். இத்தாலி உணவகம் ஒன்றில் பணியாற்றிய அவர் வெதுப்பகத்துறையில் தற்போது தவிர்க்கப்பட முடியாத ஆளுமையாக வலம் வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வீட்டில்...

இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இவர் தனது வீட்டில் நேற்று தனித்திருந்த போது வீட்டின் பின்பக்கம் சென்றுள்ளார். அப்போது அவர் வெப்பம் காரணமாக நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். சுமார் நான்கு மணித்தியாலங்களின் பின்னரே அவரது குடும்பத்தினர் வீட்டுக்கு வந்துள்ளனர். அதன்போதே ஜெயக்குமார் வீட்டின் பின்பக்கம் விழுந்திருப்பதை அவதானித்து, அவரை உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். எனினும் அவர் முன்னரே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். அவரது மரணத்துக்கு அதிக வெப்பமே காரணமெனவும், உடலில் அதிகளவிலான வெப்பக்கொப்பளங்கள் இருந்தன எனவும் உடற்கூறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-26)

## நட்டமடையும்...

கொள்ளவேண்டும். பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றால், இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்தமுடியும். நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியை நான் பொறுப்பேற்றப் பின்னர், பொருளாதாரத்தின் உண்மையான நிலை குறித்த அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது இந்தச் சபையில் கூறியுள்ளேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்த பொருளாதாரத் திட்டங்களையும் எதிர்காலப் பொருளாதாரத் திட்டங்கள் குறித்த உண்மைகளையும் கூறினேன். பற்றி எரிந்துகொண்டிருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். நாடு நரகமாக மாறியிருந்தது. பொருளாதாரம் முடங்கிக் கிடந்தது. பணவீக்கம் 70 சதவீதமாக உயர்ந்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். அப்போதிருந்து, நாங்கள் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களை முறையாகச் செயற்படுத்த ஆரம்பித்தோம். இதன் பயனாக, 2023ஆம் ஆண்டின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. வெளிநாட்டுப் பணியாளர்கள் அதிகளவில் பணம் அனுப்புகிறார்கள். 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் டொலரின் பெறுமதியை 300 ரூபாவாகக் குறைவாக கொண்டுவர முடிந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு 5 பில்லியன் டொலருக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான, சரியான பாதையை நாங்கள் பின்பற்றியதால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. இந்த நாட்டில் சிலர் நாங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் விமர்சித்தார்கள். சர்வதேச நாணய நிதியத்தை நாடியது முதல் நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்புக்கான அனைத்துச் செயற்பாடுகளையும் விமர்சித்தனர். ஆனால் அந்த விமர்சனங்கள், அவதூறுகள், கட்டுக்கதைகள் என அனைத்துக்கும் மத்தியில் நாம் தொங்குபாலத்தைக் கடக்க முயற்சித்தோம். அது மட்டுமே ஒரே வழியாகும் என்பதையும் நாம் உணர்ந்து கொண்டிருந்தோம் - என்றார். (அ-ம-26)

## இலங்கையில்...

பிரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

'சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம்' என்ற அந்த மனித உரிமைகள் அமைப்பு, 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கைப் படையினரால் சித்திரவதை செய்யப்பட்ட 123 தமிழர்களின் விவரங்களை அடிப்படையாக வைத்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கை பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரதூரமான சர்வதேசக் குற்றங்களுக்கு எவ்விதமான பொறுப்புக்கூறலும் இல்லாமல் பல தசாப்தங்களாக தண்டனை விலக்களிக்கும் போக்கே காணப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு 24 பேர் தடுப்புக் காவல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் ஜனாதிபதியாக ரணில் ஆட்சிப்பீடம் ஏறிய பின்னரே சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் தொடர்பான 130 விசாரணைகளின்போது அவர்கள் குறைந்தபட்சம் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

பாலியல் ரீதியான சித்திரவதைகளும் தடுப்புக்காவலின்போது அடிக்கடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 40 பாலியல் சித்திரவதைச் சம்பவங்கள் ஆண்கள் மீதும், 11 சித்திரவதைகள் பெண்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரதூரமான சர்வதேசக் குற்றங்களுக்கு எவ்விதமான பொறுப்புக் கூறலுமில்லாமல் தண்டனை விலக்களிப்புப் போக்கே பல தசாப்தங்களாகக் காணப்படுகின்றது. தமிழர்களுக்கு எதிரான இந்த வன்முறைகளை, சர்வதேச சமூகத்தின் பெரும் அழுத்தத்தின் மூலமாகவே கட்டுப்படுத்தமுடியும் - என்றுள்ளது. (அ- ம-ச)

## டயானாவின்...

தில் ஓர் உறுப்பினருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் நேற்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட டயனா கமகே, நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்குத் தகுதியற்றவர் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதையடுத்து 2024ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதியுடன் நடைமுறைக்கு வரும் வகையில் டயானா கமகேவின் பதவி இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே நாடாளுமன்ற வெற்றிடம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ பரிந்துரைத்துள்ளார். (அ-ம-44)

## தவறான...

நடந்துள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த அன்றன் மரியதாஸ் கிருபாகினி (வயது - 26) என்ற யுவதியே உயிரை மாய்த்தவராவார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-555-100)

## மூதாட்டியிடம்...

ஒத்திவைத்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வாகனத்தில் பயணித்து பழைய பொருள்களைச் சேகரித்த மூவர், பருத்தித்துறை - தும்பளை வீதியில் மூதாட்டி ஒருவரின் தொலைபேசியை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குற்றப்பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தீர்ப்புக்காக கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதற்கமைய அவர்களுக்கு ஆறு மாத கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்துதுடன், பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு மூவரும் தலா 50 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார். (அ-ச-100)

## செப்.17...

திக்கு இடைபட்ட காலப்பகுதியில் கோரப்பட்டு உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வியாழக்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்கவால் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பில், இலங்கை அரசியலமைப்பு மற்றும் 1981 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் இலக்கம் 5 இன் படி குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உட்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 2024 செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கும் இடைபட்ட காலப்பகுதியில் கோரப்பட்டு உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றுள்ளது. (அ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாக்கு யாருக்கு? சிங்கள வேட்பாளர்கள் அச்சம்



## சரவணபவன் கருத்து

**யாழ்ப்பாணம், மே 10**

**ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர்களின் வாக்குகள் யாருக்குக் கிடைக்கப்போகின்றது என்பதையிட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் அச்சமடைந்துள்ளனர் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளைத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மே 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் பொதுவேட்பாளர் தொடர்பாக இறுதி முடிவு அந்தக் கூட்டத்தில் எட்டப்படும். நான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன்.

அண்மையில் பொதுவேட்பாளர் தொடர்பாகக் கூடிய கூட்டத்தின் மூலம் அரசியல் சார்பில்லாத ஒருவர் பொதுவேட்பாளராகக் கண்டறியப்பட்டு நிறுத்தப்படுவார். ஆனால், இதுவரை பொது வேட்பாளர் கண்டறியறிப்படவில்லை.

பொதுவேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதனைச் சரியாக செய்வார்கள்.

இந்நிலையில் பிரதான மூன்று வேட்பாளர்களும் தற்போது தமிழ் மக்களின் வாக்குகள் யாருக்குக் கிடைக்கும் என்பது குறித்து அச்சமடைந்துள்ளனர் - என்றார். (அ-125)

## மே மாதத்தின் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மே மாத பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க் கொடுப்பனவு என்பன பிரதேச செயலக சமூக சேவைகள் அலகால் அந்தந்த அஞ்சல் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

---

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/54971) J-1

**074 173 7684**

---

## சமையலாள் தேவை

சமூகத்தில் உயர்மட்டத்தில் உள்ள ஒருவரின் வீட்டில் சமையல் செய்வதற்கு ஆள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.



**அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு:- 077 120 9998**

---

## வீடு வாடகைக்கு

வவுனியா தோணிக்கல்லில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு. முற்பணம் 3 லட்சம், வாடகை 15000.00 அத்துடன் மாணவ மாணவிகள் தங்கி படிக்க அல்லது உத்தியோகத்தர்கள் தங்க 3 அறைகள் கொண்ட மாடி வீடும் வாடகைக்கு விடப்படும். முற்பணம் 1 லட்சம், வாடகை 6000.00, ➤ தரகர் தேவை இல்லை

தொடர்பு: **076 322 3687, 024 222 2289** (CS 28406) V-1

---

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபை எல்லையில் A9 வீதிக்கு அருகாமையில் **இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு.**

- **3, அறைகள், சகல வசதிகளையும் கொண்டது. ஒரு அறை A/C உண்டு.**
- **ஒரு அறை A/C வசதியுடன் கூடிய வீடு, உடன் வாடகைக்கு உண்டு.**

(CS/55005) J-1

**077 484 2578, 076 190 7701**

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்** வரை
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

**தொடர்பு :- 077 886 2927**

---

## தச்சு வேலையாட்கள் தேவை

**(90,000 - 120,000 சம்பளம்)**

**யாழ்ப்பாணம் - தொல்புரம்** பிரதேசத்தில் உள்ள **தொழிற்சாலைக்கு சகல தச்சு வேலைகளும் திறமையாக செய்யக் கூடிய இருவர் உடனடியாக தேவை.** வெளிமாவட்ட ஆட்களுக்கு உணவு / தங்குமிட வசதி வழங்கப்படும்.

(CS/55001) J-1

**077 213 7266**

---

# நன்றி நவிலலும்
## ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்

மண்ணில்
29.03.1968

விண்ணில்
12.04.2024



கடந்த 12.04.2024ஆம் திகதியன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்

தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி - தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்)

விபத்துச் செய்தி அறிந்தும் தொடர்ந்து மறைவினை அறிந்தும் எமது துயரில் அருகிலிருந்து ஆற்றுப்படுத்தியவர்கள், எமது இல்லத்திற்கு வருகைதந்து துயரில் பங்குகொண்டவர்கள், இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலித்தவர்கள், அஞ்சலி நிகழ்வினை நடாத்திய கல்விச்சமூகத்தினர், நினைவுப்பிரசுரங்களை வெளியிட்டோர், மலர் வளையங்களும் மலர் மாலைகளும் சாத்தி அஞ்சலி செய்தோர் மற்றும் நேரடியாக வருகைதரமுடியாத போதிலும் தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்கள் ஊடாக தமது இரங்கல்களை பகிர்ந்துகொண்டவர்கள் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலாக இருந்து உதவிகளை வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் இடம்பெற்று தொடர்ந்து

**வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (11. 05.2024) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் 12.00 மணியளவில் நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்

(cr.42405)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்
## ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

தோற்றம்
20 • 05 • 1936



மறைவு
23 • 04 • 2023

கடந்த வருடம் 23.04.2023 அன்று சிவபதப்பேறு அடைந்த எமது
குடும்ப விளக்கு

## அமரர் செல்லையா லீலாவதி

அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலியும், ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இன்று (10.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **"நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில்"** நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

17/1 , மணல் தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
சகோதரன்
செல்லையா திருநாவுக்கரசு.
077 244 8489

(CS/54996) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.